Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 72 of 2024

DATE : 19.06.2025

Depositions of witness for Prosecution

PW : 1

| | | | |
|---|---|---|---|
| Name | ராமமூர்த்தி | Caste | |
| Father/Husband's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of June 2025

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை : –**

1) நான் சிவகாசியில் வசித்து வருகிறேன். நான் பிரிண்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 04.08.2020 அன்று சுமார் 4.15 மணிக்கு ஆனந்த் என்பவர் போன் பண்ணி எனது அப்பா சரவணனுக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார். உடனே நான் துலுக்கப்பட்டியில் இருந்து முத்துக்குமாரபுரம் செல்லும் சாலையில் உள்ள பவுன்ராஜ் என்பவரின் கோழிப்பண்ணை அருகே சென்றேன். அங்கே ஆனந்தராஜ் என்பவர் எனது அப்பா பேசிக்கொண்டிருக்கும் போது ஆஜர் எதிரி ஆட்டோவை அதிவேகமாக ஓட்டி வந்து எனது அப்பா மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக கூறினார். ஆஜர் எதிரியே காயம்பட்ட எனது அப்பாவை தனது ஆட்டோவில் ஏற்றி ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். நான் எனது அப்பாவை ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தேன் அப்போது அவருக்கு பின்னந்தலையிலும், காலிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டு பேச முடியாத நிலையில் இருந்தார். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் எனது அப்பா 5 நாட்கள் இருந்தார். 5 நாட்கள் கழித்து எனது அப்பா இறந்துவிட்டார். விபத்து சம்மந்தமாக ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில்இருக்கும் போது தகவல் அறிந்து வந்த நத்தம்பட்டி காவல் நிலைய அதிகாரியிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு